IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. STC.753/2023 |
| Preliminary Register | ) | |
| Sessions | ) | |

Deposition of witness for — Prosecution pw5 / Defence / Court

Name : பட்டமுத்து

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.09.2024

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணையில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். ஏழாயிரம்பண்ணையில் குகன்பாறை மெயின் ரோட்டில் அங்காளஈஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. அந்த கோவில் ஆசாரிமார்களுக்கு பாத்தியப்பட்டதாகும். 14.03.2023 ம் தேதி மதியம் 11.00 மணியளவில் அங்காளஈஸ்வரி அம்மன் கோவிலின் பூட்டை ரெங்கநாதனும், சங்கர் என்பவரும் உடைத்தனர். அ.சா.1 என்னிடம் இதுபற்றி

சொன்னார். நான் உடனே கேள்விபட்டு சம்பவ இடம் சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்தனர். அங்கு முதலில் நான் சென்றேன். அதன் பிறகு மூர்த்தி அங்கு வந்தார். அ.சா.1ம் அங்கு இருந்தார். பூட்டு உடைந்து கிடந்தது. உடனே நான்கு பேர், வேல்சாமி, முனியசாமி, பாக்கியராஜ் மற்றும் நான் காவல் நிலையம் சென்றோம். போலீசார் விசாரணை செய்தனர். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல விசாரித்தார்கள். எங்கள் ஊரில் உள்ள ஆசாரி சமுதாயத்தினர் இரண்டு பிரிவுகளாக உள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் ஒரு பிரிவாகவும், ARP மரக்கடைகாரர்கள் ஒரு பிரிவாக உள்ளோம் என்றால் சரிதான். எதிரிகள் ARP மரக்கடைகாரர் பிரிவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அங்காளஈஸ்வரி கோவில் கணக்கு ஒப்படைப்பது சம்மந்தமாக எங்கள் இரு பிரிவினர்களுக்குள்ளும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எங்கள் தரப்பிலிருந்து கணக்கு சரிவர ஒப்படைக்காத காரணத்தினால் பிரச்சனை ஏற்பட்டு கோவில் பூட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வளவு காலமாக கோவில் பூட்டியுள்ளது என்றால் இரண்டு வருடங்கள் இருக்கும். சம்பவம் பற்றி முனியசாமி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்ன கம்பெனி பூட்டு போட்டு கோவில் பூட்டப்பட்டுள்ளது என்றால் இரண்டு பூட்டுகள் குந்தன் கம்பெனி பூட்டுகள் ஆகும். முனியசாமி கொடுத்த புகாரில் நான் வேலுச்சாமி, பாக்கியராஜ் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம் என்றால் ஞாபகமில்லை. நான் சொல்லுவது போல் ARP மரக்கடைகாரர்கள் தரப்பிலிருந்து எங்களிடம் கோவில்சம்மந்தமான கணக்கு கேட்டதால் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO 1, SATTUR

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. STC.753/2023 |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw6 |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : மூர்த்தி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.09.2024

நான் தற்பொழுது ஏழாயிரம்பண்ணையில் வசித்து வருகிறேன். நான் வெல்டிங் ஓர்க்சாப் வைத்துள்ளேன். அ.சா.1 மற்றும் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். 14.03.2023ம் தேதி நான் எனது பட்டறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் காலை 11.00 மணியளவில் சுத்தியல் வேண்டும் என்றும், கொஞ்சம் வேலை இருக்கிறது என்றும் சொல்லி சுத்தியலை என்னிடமிருந்து வாங்கி சொன்றார்கள். கொஞ்ச நேரம் கழித்து எதிரிகள் சுத்தியலை வைத்து

அங்காளஈஸ்வரி அம்மன் கோவிலின் பூட்டை உடைத்ததாக தெரிந்து கொண்டேன். பின்னர் இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை

அ.சா.1 முனியசாமி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எதிரிகளும் தச்சு வேலை தான் பார்க்கிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் சுத்தியலை கேட்டதாக சொல்லும் சமயத்தில் என்னுடன் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் மகேஷ், மணி, சிவா ஆகிய மூன்று பேர்கள் இருந்தார்கள். அவர்கள் என் பட்டறையில் வேலை பார்ப்பவர்கள். எதிரிகள் தச்சு வேலை பார்ப்பதால் அவர்களே சுத்தியல் வைத்திருப்பார்கள் என்றாலும், அவர்கள் என்னிடம் வந்து சுத்தியல் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகள் என்னிடம் சுத்தியலை வாங்கி சென்று அங்காளஈஸ்வரி அம்மன் கோவிலின் பூட்டை உடைக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த சுத்தியலை போலீசார் கைப்பற்றியுள்ளார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.